**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **செல்வி V. பார்கவி, B.A.B.L.,L.L.M.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

-------

2021-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07ம் நாள் சனிக்கிழமை
திருவள்ளுவராண்டு 2052, பிலவ வருடம் ஆடி மாதம் 22ஆம்நாள்

------

**அசல் வழக்கு எண்.192/2012-ல் இடைமனு எண்.01/2021**

நஜீர் அகமது ...மனுதாரர்/வாதி

...எதிர்...

1. பக்கீர் முகம்மது
2. வினோத் ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 26.07.2021 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. எ. செல்வராஜ் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். சுந்தரய்யா அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இதுநாள்வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

அசல் வழக்கை ( 192/2012) அசல் வழக்கு எண். 188/2016 என்ற வழக்குடன் ஒன்றாக சேர்த்து விசாரணை செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனு உ.வி.மு.ச. பிரிவு 151-ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சுருக்கம்

அசல் வழக்கை மனுதாரர்/ வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாவா சொத்தைப்பொறுத்தும் இதில் சேராத இதர குடும்ப சொத்துக்களைப்பொறுத்தும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மற்றும் இதர சகோதரர்கள் மீதும் இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 188/2016 என்ற வழக்கை தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. எனவே அசல் வழக்கை அசல் வழக்கு எண்.188/2016 உடன் ஒன்றாக சேர்த்து விசாரணை செய்தால் நீதிமன்ற நேரத்தையும், அனாவசியமான சட்ட சிக்கலையும் நீக்க ஏதுவாக இருக்கும். எனவே அசல் வழக்கை இந்நீதிமன்ற அசல் வழக்கு எண். 188/2016 வழக்குடன் ஒன்றாக சேர்த்து விசாரணை செய்யவேண்டியது அவசியமாகும். அதனால் மனுதாரர் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார். மனுவை

அனுமதிக்க வேண்டும்.

3. 1-ம்எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2-ம் எதிர்மனுதாரரால் தன்னுடையதாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்

மனு சட்டப்படியும், நியாயப்படியும் சரியல்ல. மனுவிற்கு ஆதரவாக மனுதாரர் ஆணையுறுதிப்பத்திரத்தில் கூறியுள்ள சங்கதிகள் சரியல்ல. அசல் வழக்கானது மனுதாரர்/ வாதியால் நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் விளம்பல் பரிகாரம் கோரிதாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கு எண். 188/2016 என்ற வழக்கானது மனுதாரர்/ வாதியால் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் மேலும் தரப்பினர்கள் சேர்க்கப்பட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்து விசாரணைக்கு வர காலதாமதம் ஆகும். இரண்டு வழக்குகளிலும் கோரியுள்ள பரிகாரங்கள் வெவ்வேறானவை. இரு வழக்குகளின் எழுவினாக்களும், சாட்சியமும் மாறுபடும். இரு வழக்குகளையும் ஒன்றாக சேர்த்து நடத்த முடியாது. அவ்வாறு நடத்த முயன்றால் பலவித நடைமுறை சிரமங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

.4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை

மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. **தீர்வு**

அசல் வழக்கை மனுதாரர்/ வாதி தாவாச்சொத்தினைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், இந்த வழக்கின் வழக்குச்சொத்து மற்றும் இதர குடும்பச்சொத்துக்களைப்பொறுத்து எதிர்மனுதாரர்கள் மற்றும் இதர சகோதரர்களுக்கு எதிராக மனுதாரர் அசல் வழக்கு எண். 188/2016 என்ற வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும், அந்த வழக்கின் சொத்து விபரமும், தரப்பினர்களும் இந்த வழக்கின் சொத்துவிபரமும், தரப்பினர்களும், ஒன்றாக உள்ளதால் இரண்டு வழக்குகளையும் ஒன்றாக சேர்த்து பொதுவாக விசாரணை செய்வதால் வீண்காலதாமதம் தவிர்க்கப்படும் என்றும், எனவே அதன்பொருட்டு மனுதாரர் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார் என்றும் அதனால் மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் மனுதாரர் தரப்பில் வாதம் செய்யப்பட்டது. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இந்த அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும்

விளம்பல் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அ.வ.எண். 188/2016 என்ற வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இரண்டு வழக்குகளிலும் கோரியுள்ள பரிகாரங்கள் வெவ்வேறானவை என்றும், அதேபோல் எழுவினாக்கள் மற்றும் சாட்சிகள் மாறுபடும் என்றும், இருவழக்குகளையும் ஒன்றாக சேர்த்து நடத்த முடியாது என்றும், அவ்வாறு ஒன்றாக சேர்த்து நடத்தினால் பலவித நடைமுறை சிரமங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும், மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதம் செய்யப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்குக் கோப்புக்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் இந்த அசல் வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளநிலையில் , மனுதாரர் எதிர்மனுதாரர்கள் மற்றும் இதர சகோதரர்களுக்கு எதிராக பாகப்பிரிவினை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண். 188/2016 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், இந்த வழக்கையும் அசல் வழக்கு எண். 188/2016 -யையும் ஒன்றாக சேர்த்து விசாரணை செய்ய வேண்டுமென்று மனுதாரர் இம்மனுவில் கோரியுள்ளார். இந்த அசல் வழக்கு மற்றும் அசல்வழக்கு எண். 188/16- வழக்கு கோப்புக்களை ஒருசேர பரிசீலனை செய்கையில் மனுதாரர் இந்த அசல் வழக்கை (192/2012) சீர்காழி தாலுக்கா, திருமைலாடி வட்டம், துளசேந்திரபுரம் கிராமம், மெயின்ரோட்டில் உள்ள புஞ்சை புல எண். 369/7Cல் 3770 சதுரடி (350 ச.மீ) சொத்தினைப்பொறுத்து 1,2 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் பாகம் பிரிபடாத சொத்தைப்பொறுத்து முதல்பிரதிவாதி இரண்டாம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ள 01.08.2012-ம் தேதியிட்ட கிரய சாசனம் செல்லாது அது வாதியின் சரிசமமான பாகவீதத்தை கட்டுப்படுத்தாது என்று விளம்பல் பரிகாரமும் கோரி தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கு எண். 188/2016 என்ற வழக்கை வாதி இந்த வழக்கில் 1,2 பிரதிவாதிகள் உள்பட 16 நபர்களுக்கு எதிராக தாவாச்சொத்தை "F" அட்டவணையாகக் காட்டி இதர சொத்துக்களையும் காட்டி பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்பது தெளிவாகிறது.

8. மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி வழக்குகளை ஒன்றாக சேர்த்து நடத்தினால் பலவித நடைமுறை சிரமங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்பதை தவிர வேறு வலுவான ஆட்சேபணை எதுவும் எழுப்பப்படவில்லை. மேலும் இரு வழக்கின் பரிகாரங்கள் வேறு வேறாக இருப்பினும், வழக்கின் வழக்குமூலங்கள் பிரிபடாத குடும்ப சொத்தினை குறித்து ஒரே தரப்பினர்களுக்கிடையே எழுந்துள்ளதால், இவ்வழக்குகளை ஒன்றாக சேர்த்து விசாரிப்பதன் மூலம் இந்நீதிமன்றத்திற்கான சுமையும், நேரமும் குறையும் என்றும் விரைவாக வழக்கில் முடிவு காணமுடியும் என்றும்

இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இந்நிலையில் ' மனுதாரர் இம்மனுவில் கோரியுள்ள அசல் வழக்கு எண். 188/16-ன் தரப்பினர்களும், 192/12-ன் தரப்பினர்களும், வழக்குச்சொத்தும் ஒன்றாக இருப்பதால், ஒரே பொருண்மையின் அடிப்படையில் இருவேறுபட்ட தீர்ப்புக்கள் ஏற்படுவதை தவிர்க்கும் வகையிலும் இந்த அசல் வழக்கை(192/12) அசல் வழக்கு எண். 188/2016 என்ற வழக்குடன் ஒன்றாக சேர்த்து விசாரணை செய்ய வேண்டுமென்று மனுதாரர் இம்மனுவில் கோரியுள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. . ஆதலால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கை(192/12) அசல் வழக்கு எண். 188/2016 என்ற வழக்குடன் சேர்த்து ஒன்றாக விசாரணை செய்ய வேண்டுமெனக்கோரியுள்ள இம்மனுவானது அனுமதிக்கத்தக்கது என்றும், மனுவின் தன்மை கருதி செலவுத்தொகையை தரப்பினர்கள் அவரவரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து இம்மனுவின் பிரச்சனைக்குத் தீர்வு காண்கிறது.

முடிவில் இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2021-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் திங்கள் 07-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.

பின் இணைப்பு

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை-

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை-

மா.உ.நீ.

நேரிய/வரைவு உத்தரவு
அசல் வழக்கு எண். 192/2012-ல்
இடைமனு எண், 01/2021
நாள் - 07.08.2021.